தேசிய நூலக ஆவணவாக்கள் சேவைகள் சபை
புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

NATIONAL LIBRARY
N L S L OF SRI LANKA

# வெற்றிடங்கள்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்ப தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி :** **உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) (வெற்றிடம் 01)**

**சேவை வகுதி** : **முகாமைத்துவ சேவை வகுதி (MM 1 – 1)**

**சம்பளம்** : MM 1 - 1 - 2025 ரூ:91,690 – 10 x 2,480 – 15 x 3,450- 168,240/= (மாதாந்தம்)
(மு.சே.சு.எண் 01/2025 இன்படி 2025.01.01 திகதியில் ரூ:71,730 /=வும், 2026.01.01 திகதியில் ரூ:81,710/= வும் மற்றும் 2027.01.01 திகதியிலிருந்து ரூ: 91,690/=ஆகவும் சம்பளம் வழங்கப்படும்.)

**வயது** : 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (உள்தாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**தகமைகள் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வருவனவற்றில் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்புப் பட்டம் (முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் / பொது நிர்வாகம் / வணிகம் / பொருளாதாரம் போன்ற ஒரு பாடத்தில்) பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

பட்டம் பெற்ற பின் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயித்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் தொடர்புடைய பாடப்பிரிவில் குறைந்தது மூன்று (03) வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் முதுகலை டிப்ளமோ படிப்பை வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

மேற்கூறிய தகைமைகளைப் பெற்ற பின், அரச, அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியாயித்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் குறைந்தது மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு (பின்வருவனவற்றில் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளின் தகமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. கனிஸ்ட முகாமைத்துவ (JM) சேவை வகுதியில் தொடர்புடைய விடய பதவியில் குறைந்தது ஐந்து வருட (05) காலம் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

**குறிப்பு** : கணினி பயன்பாட்டுகளைப் தொடர்பான அறிவை பெற்றிருத்தல்

**ஆட்சேர்ப்பு முறை** : திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம்

சகல விண்ணப்பதாரர்களும்,

அ. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. பதவிக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செய்வதற்கும், நாட்டின் எப் பகுதியிலும் வேலை செய்வதற்கும் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இ. சிறந்த நன்னடத்தைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

சேவை நிபந்தனைகள் :

1. இப் பதவி நிரந்தரமானதுடன் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களினால் 8% செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் தொழில் வழங்குனரால் 12% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு செலுத்தப்படும்.

மேற்படி பதவிகளுக்கான கடமை நிலையம் : கொழும்பு

முழுமையான சுய விபரத் தகவல்கள் தமது கல்வி / தொழில் தகமைகள், சேவை அனுபவங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் தமது தகவல்களை சரிபார்க்கக்கூடிய உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைப்பேசி இலக்கத்தை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவத்துடன் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து “தலைவர், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல 14, சுதந்திர வழி, கொழும்பு 07” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.08.25 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

அரச/ அரச சார்ந்த / நியாயாதித்த நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்கள / நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட சகல விடயங்களையும் பூர்த்தி செய்திராத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

தலைவர்
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
இல 14, சுதந்திர வழி, கொழுப்பு 07
Website : www.natlib.lk